**விலைக்கட்டுப்பாடுகளும், பங்கீடும்**

1977இன் பொருளாதாரச் சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக அதிகமான விடயங்களின் மீதான விலைக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. 1978இல், விலைக் கட்டுப்பாட்டிலிருந்து கொத்துமல்லி நீக்கப்பட்ட வேளையில் விலைக் கட்டுப் பாட்டின் கீழான விடயங்களின் சிறு பட்டியலில் எதுவும் சேர்க்கப்படவில்லை. கோதுமைமா, பாண், பருப்பு, பால், ஆகியவற்றின் கட்டுப்பாட்டு விலைகள் அதிகரிக்கப்பட்டன.

இன்றியமையாத உணவு விடயங்களின் பங்கீடு, வழங்கல் ஆகியவற்றிற் கான திருத்தப்பட்ட திட்டம் 1977 நவெம்பரில் அறிவிக்கப்பட்டு 1978 பெப் புருவரியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. புதிய திட்டத்தின் கீழ் பங்கீட்டி லான உதவுதொகை அடிப்படையில் பங்கீட்டிற்காக வழங்கப்பட்டஅரிசி ஏறக்குறைய மக்கட் தொகையின் அரைப்பங்கை உள்ளடக்கிய குறைந்த வரு வாய் (ஆண்டொன்றுக்கு ரூ. 3,600 பெறுபவர்கள்) பெறும் தொகுதிக்கு வரை யறுக்கப்பட்டது. இத்தொகுதிக்குள் சீனிப்பங்கீடு பிள்ளைகளுக்கு வரையறுக்கப் பட்டது. வெளிச்சந்தையில் சடுதியாகப் பெருமளவு அரிசி விற்பனைக்கு வந்தது. இவ்வருகை ஒரு திறமையான சந்தை நிலையை உருவாக்கியது. இச்சந்தையில் சராசரிதரமுடைய அரிசியின் விலை கிட்டத்தட்ட ரூ. 2.90க்கும் ரூ. 3.20க்கு மிடையில் நிலையாக இருந்தது.

நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம், வெளிச்சந்தையொன்று இயங்குவதைத் தடுக்காமல் நுகர்வோரைப் பாதுகாக்கும் நோக்குடன் கொண்டு வரப்பட்டது. தேசிய விலைகள் ஆணைக்குழு அரச தொழில் முயற்சிகளின் விலைகளை நிர்ணயிப்ப தோடு மட்டும் தனது பணியினைப் பொதுவாக நிறுத்திக் கொண்டது.

**கூலிகள்**

மத்திய வங்கியின் சுட்டெண்ணின் அளவுப்படி 1977 இல் 13 சதவீதத் தினுல் உயர்வடைந்த அரச ஊழியர்களின் ஆகக்குறைந்த கூலிகள் 1978இல் மேலும் 15 சதவீதத்தினுல் உயர்வடைந்தது. எழுதுவினைஞர், தொழில் நுட்ப ஊழியர்களின் பெயரளவிலான கூலிகள் 1977 இன் 1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பு நோக்குகையில் 12 சதவீதத்தினுல் உயர்வடைந்துள்ளது. ஒப்புநோக்கு கையில் கடந்த ஆண்டில் 2 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்த சிற்றூழியர் களினதும் பள்ளிக்கூட ஆசிரியர்களினதும் கூலிகள் முறையே 16 சதவீதத் தினுலும் 10 சதவீதத்தினுலும் உயர்வடைந்தன. 1977 திசெம்பரில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டமையே பணக் கூலி வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கான முக்கிய காரணமாகும். பணக் கூலிகள் முறையே கடந்த ஆண்டில் கணிசமானளவு வளர்ச்சியினைக் காட்டிய பொழுதும் 1978இல் அவை மாற்றமடையாதிருந்தன. 1978 நவெம்பரில் மிகவும் கணிசமானளவு கூலி அதிகரிப்பு அறிவிக்கப்பட்ட போதிலும் இது 1979 இலிருந்து மட்டுமே நடைமுறைக்கு வரும். பொருளாதாரத்தில் பணவீக்க வீதத்திற்கு இடம்விட்டு நோக்குகையில் இத்துறையில் சிற்றூழியர்களின் கூலிகள் தவிர்ந்த உண்மைக் கூலிகள் வீழ்ச்சியடைந்தது போல் காணப்பட்டன.

கூலி நிர்ணய சபையினுல் உள்ளடக்கப்பட்ட தனியார் துறையின் தொழிலாளர்களது பணக்கூலிகள், தொழில் திணைக்களத்தின் சுட்டெண்ணின் அளவீட்டின்படி 1978இல் உயர்ந்த வீத வளர்ச்சினைக் காட்டுகின்றது. வேளாண்மையிலுள்ள தொழிலாளர்களின் கூலிகள் 45 சதவீதத்தினுல் உயர்வடைந்த அதே வேளையில், கைத்தொழிலிலும் வர்த்தகத்திலுமுள்ள தொழிலாளர்களின் கூலிகள் 24 சதவீத உயர்வினைக் காட்டின. 1977இல் இவை தொடர்பான அதிகரிப்புக்கள் முறையே 25 சதவீதமாகவும், 8 சதவீதமாகவும் காணப்பட்டன. பண வீக்கத்திற்கு இடம்விட்டு நோக்குகையில், இத்துறையில் உண்மையான கூலிகள் வளர்ச்சி அடைந்துள்ளதாகக் காணப்படுகிறது. இதற்கான காரணிகள், 1977 திசெம்பரில் அரச ஊழியர்கட்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வைத் தனியார் துறைக்கும் வழங்கியமை, கொழும்பு நுகர்வோர் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணின் உயர்ச்சிக்கேற்ப வாழ்க்கைச் செலவு கொடுப்பனவினை அதிகரித்தமை, தேயிலை இறப்பர் பெருந்தோட்டங்களில் அவற்றின் விலை அதிகரிப்பிற்கேற்ப கொடுக்கப்பட்ட கூலி அதிகரிப்பு என்பனவாகும்.

கிடைக்கத்தகு கூலிச் சுட்டெண்கள் தொடர்புபடுத்தும் தரங்களின் ஆகக் குறைந்த கூலி வீதங்களைக் காட்டிய போதிலும், அவை மேலதிக நேரவேலைக் கொடுப்பனவு சம்பள உயர்வு மிகைஊதியம் ஏனைய ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் போன்றமேலதிக ஊதியங்களைப் பிரதிபலிக்கவில்லை. அரச துறையிலும் தனியார் துறையிலும் உள்ள ஊழியர்கள் தமது பெயரளவிலான வருமானங்களை ஈடுசெய்வதற்கு சாதாரண வேலை நேரத்திற்கு மேலாக தேவையற்ற (மேலதிக நேர) வேலையினைச் செய்தமையும், சாதாரண வேலை செய்யும் இடங்களில் மிக உயர்ந்தளவு வேலைக்குவராத வீதத்தினைப் பிரதிபலித்து தனியார் வேலை இடங்களில் பகுதி நேர வேலையில் ஈடுபட்டிருந்தமையும், உண்மைக் கூலியின் வீழ்ச்சிப் போக்கிற்கான ஆதாரங்களாகும். பண வருவாய் பண வீக்கத்தினுல் ஆட்கொள்ளப்படின் இச் சூழ்நிலை தவிர்க்க முடியாததாகும். இப்பிரச்சினையை சட்டத்தின் மூலம் நீக்கும் முயற்சியிலும் பார்க்க உற்பத்தித் திறனுக்கேற்ப கூலிகளையும் பண வீக்கத்திற்கு ஈடுசெய்யும் முறையில் உரிய இழப்பீட்டையும் உருவாக்கல் ஏற்ற மாற்று வழிகளாகும்.

## தொழில் நிலை

கடந்த ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டது போன்ற நம்பத்தகுந்ததும் தொடர்ச்சியானதுமான தரவுகள் கிடைக்கப்பெருமையே இலங்கையில் தொழில் நிலை, தொழிலின்மை ஆகியவற்றில் பகுப்பாய்வின் போக்கிலுள்ள அடிப்படைப் பிரச்சினையாகும். இதனுல் மொத்த தொழிற்படை தொழிலில் அமர்த்தப்பட்டோரினதும் தொழிலற்ரோரினதும் எண்ணிக்கை போன்ற முக்கிய மாறிலிகளை ஒழுங்கற்ற இடைவெளிகளில் நடாத்தப்பட்ட குடிமதிப்பு, மாதிரி அளவைகளில் இருந்து பெறப்பட்ட தரவுகளிலிருந்தே மதிப்பிடவேண்டியுள்ளது. இம் மாறிலிகளுக்குரிய ஆகப்பிந்திய நிறைவான கிடைக்கத்தகு தரவுகள் 1971இற்கும் 1973இற்கும் உரியனவாகும்.

1971 குடிமதிப்பு தரவுகளின்படி தொழிற்படை 45 இலட்சம் பேராக விளங்கி குடித்தொகையில் 35 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தது. 1973இல் மத்திய வங்கியின் நுகர்வோர் நிதி அளவையின்படியான தொழிற்படை மதிப்பீடு சிறிது உயர்வானதாகும். குடித்தொகையில் அகவை அமைப்பும், அகவைக்குரிய செயற்பாட்டு வீதங்களும், 1978இல் மொத்தக் தொழிற்படை 56 இலட்சமாக அதிகரித்தமையை எடுத்துக் காட்டுகின்றது. இது 1978க்கான மதிப்பிடப்பட்ட குடித்தொகையில் 39 சதவீதமாகும்.